Registered as a Newspaper

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆு வைகாசி மீ 29 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 14 (12 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 169

## திக்கத்தில் கண்ணிவெடி

# படையினர் கூட்டிச்சென்ற தமிழ் இளைஞர் பலர் பலி

### கடலோர பாதுகாப்பு உஷார்

சென்னை, ஜூன் 11

இராமநாதபுரம் கடலோரப் பகுதி, உச்சிப் புளி விமான நிலையம் ஆகிய பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகவலை இராமநாதபுரம் காவல்துறை தலைமைத் துணை ஆய்வாளர் திரு. முகர்ஜி தெரிவித்தார். (உ–எ)

யாழ்ப்பாணம், ஜூன் 12

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள வடமராட்சிப் பகுதியில் இராணுவ வண்டித் தொடர்மீது நேற்றுக் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலினுல் மூன்று படையினர் கொல்லப்பட்டனர் என்று அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது.

படையினர் தமக்குப் பாதுகாப்புக்காகக் கூட்டிச்சென்ற தமிழ் இளைஞர்களில் பலர் (பத்துக்கும் அதிகமானேர்) உயிரிழந்ததாகவும் அறியவந்தது.

மூன்று படையினரும் 21 தமிழ் இளைஞர்களும் படுகாயம் அடைந்தனர்.

திக்கம் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் நேற்றுக் காலை 8 – 30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலினுல் படையினரின் டிரக் ஒன்று சின்னுபின்னமானது.

காயமடைந்த தமிழ் இளைஞர்கள் மந்திகை ஆஸ்பத்திரியிலும், பலாலி இராணுவ ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டிருப்பதாகவும்—

மரணமான இளைஞர்களின் சடலங்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருப்பதாகவும்—

இறந்த சிப்பாய்களின் சடலங்கள் ஹெலிக்கொப்டர் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ–10)

### முச்சந்தி முரளி



வயது போனவைக்குத் தான் சணம் பித்தம் சணம் வாதம் எண்டு நோய் வருகுதெண்டா உவர் அச்சாணியாருக்கு இந்த வயதிலேயே அந்த வியாதி......!

### சுபநேரம்

12-06-1987
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:–
5.52 முதல் 7.22 வரை

ராகுகாலம்:–
10.22 முதல் 11.52 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

திருஞானசம்பந்தர் குருபூசைத் தினம்

## பேச்சுக்கு வரவேண்டும் இல்லையேல் தாக்குதல்

### அத்துலத் விடுத்துள்ள எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 12

இராணுவத் தாக்குதல் இடைநிறுத்தி வைக்கப்பட்ட காலத்தைப் பயன்படுத்தி பேச்சுக்களை நடத்த தமிழ்த் தீவிரவாதிகள் முன்வரவேண்டும்.

இல்லையேல் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள், தாக்குதல்கள் நடத்தப்படும்.

—இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி அறிவித்தார்.

கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவரவே இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சொன்னுர்.

தென் இலங்கையில் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (உ–எ)

### கண்ணிவெடியினுல் பன்மதவாச்சியில் 12 பொதுமக்கள் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 12

பன்மதவாச்சியில் நேற்று பயணிகள் வாகனம் ஒன்றின்மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 12 பொதுமக்கள் பலியானதாக அரசு அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை பத்து மணியளவில்பன்மதவாச்சியில் இருந்து கித்துலுவ நோக்கி சென்றுகொண்டிருந்த ''ஹை ஏஸ்'' வான் ஒன்றின்மீது பத்தாம்கல் என்ற இடத்தில் வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது. (உ–10)

### தெகிவத்தையில் 6 சிப்பாய்கள் பலி

திருகோணமலை மாவட்டத்தில் தெகிவத்தையில் புதனன்று ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தியதில் ஆறு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

— இப்படி விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்து சிப்பாய்கள் அப் பகுதியில் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இதனுல் பலர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ–10)

ஊர்காவற்றுறையில்

### பீரங்கிப் படகு மீது கடற்கண்ணித் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஊர்காவற்றுறைகடற் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ரோந்து சென்ற கடற்படையினர் மீது கடற்கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனுல் பீரங்கிப்படகு ஒன்று பலத்த சேதமுற்றதாகவும் பல படையினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையில் உள்ள முகாமுக்கு தளபாடங்களையும்உணவுப்பொருள்களையும் ஏற்றிச் சென்ற பீரங்கிப் படகுமீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடற்படை மீதான தாக்குதலையடுத்து ஊர்மனைகள் மீது கடலிலிருந்து பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. (உ–10)

### அத்துலத் முதலி அமெரிக்காவுக்கு சூருவளிப் பயணம்!

கொழும்பு, ஜூன் 12

அடுத்த வாரம் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சூருவளிச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா செல்ல இருக்கின்றுர்.

அமெரிக்க அரசு அதிகாரிகள், நாடாளுமன்ற அதிகாரிகள், பத்திரிகை ஆசிரியர்கள் ஆகியோரையும் அமைச்சர் இப் பயணத்தின்போது சந்தித்துப் பேசி இலங்கை அரசின் நிலையை எடுத்துரைக்க இருக்கின்றுர்.

வாஷிங்டன், சிக்காகோ, லாஸ் ஏன்ஜல்ஸ், சான்பிரான்ஸிஸ்கோ, மிசூரி ஆகிய இடங்களிலும் அவர் கருத்தரங்குகளில் பேச இருக்கிறுர். (உ–எ)

**பிரபாகரன் தமிழகம் செல்லவில்லை**

**புலிகளின் அறிக்கை**

2 ஆம் பக்கத்தில்

## இலங்கைத் தமிழரை அழிக்க அனுமதியோம்

### புதிய உத்திகள் குறித்து ராஜீவ்

புதுடில்லி, ஜூன் 12

இலங்கைத் தமிழரை ஸ்ரீலங்கா அரசு அழித்துவிட அனுமதியோம். அதற்கேற்ற விதத்தில் புதிய உத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மாலை தன்னைச் சந்தித்த முதலமைச்சர் திரு.எம்.ஜி. இராமச்சந்திரனிடம் பிரதமர் இத் தகவலைத் தெரிவித்தார்.

இதே வேளை திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நேற்றும் இணை அமைச்சர் நட்வர்சிங்கைச் சந்தித்துப் பேசினுர்.

யாழ்ப்பாணத் தமிழருக்கு மேலும் நிவாரணப் பொருள்கள் வழங்குவது பற்றி இப் பேச்சுக்கள் நடைபெற்றன.

சந்திப்பின் போது தமிழக உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் கூட இருந்தார்.

முதலமைச்சர் நேற்று தமிழகம் திரும்புவதாக இருந்தபோதிலும் திட்டமிட்டவாறு செல்லவில்லை. மீண்டும் அவர் பிரதமரைச் சந்திக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ–எ)

### பிரிட்டிஷ் தேர்தல்; வாக்களிப்பு முடிவு

லண்டன், ஜூன் 12

பிரிட்டனின் பொதுத் தேர்தல் வாக்களிப்பு நேற்று சுறுசுறுப்பாக நடைபெற்றது.

இலங்கை நேரப்படி வாக்களிப்பு இன்று அதிகாலை 3மணியளவில் முடிவடையும். ஒரு மணி நேரம்கழித்துஅதிகாலை 4 மணியளவில் முடிவுகள் வெளியாகத்தொடங்கும் எனஅறிவிக்கப்படுகிறது.

இலங்கை நேரப்படி வியாழன்முற்பகல்11–30 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமானபோது மக்கள் ஆர்வத்துடன் அதில் கலந்துகொண்டனர்.

665 எம். பிக்களைத் தெரிவு செய்வதற்காக நான்கு கோடி 33 லட்சம் வாக்காளர்கள்தேர்தலில் கலந்து கொள்கிறுர்கள். (உ–எ)

ஈழத் தமிழருக்கு ஆதரவாக

### தமிழகத்தில் நேற்று இரு ஊர்வலங்கள்

சென்னை, ஜூன் 12

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நேற்று தமிழ்நாட்டில் இரு ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

இலங்கைத் தமிழர் படுகொலை செய்யப்படுவதைக் சண்டித்தும் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டும் எனக் கோரியும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கலைஞர் கருணுநிதி தலைமையில் ஓர் மௌன ஊர்வலத்தை நடத்தினர்.

இந்திய மத்திய அரசு தமிழர் விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் எனக் கோரி தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். (உ–எ)

### மீண்டும் விமானம் மூலம் உணவு?

புதுடில்லி, ஜூன் 11

உரிய வழியில் நிவாரணப் பொருள்களை யாழ்குடா மக்களுக்கு வழங்க இலங்கை அரசு சம்மதிக்கா விட்டால் மீண்டும் விமான மூலம் உணவுப் பொதிகளை யாழ்குடா நாட்டில் தரையிறக்கும் திட்டம் இந்திய அரசிடம்உண்டு.

—இப்படி இந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழ் முன்பக்கச் செய்தியில் தெரிவித்துள்ளது. (உ–எ)

### மேலும் 320 பேர் தமிழகத்தில் தஞ்சம்

சென்னை, ஜூன் 12

கடந்த புதன், வியாழக்கிழமைகளில் சுமார் 320 இலங்கைத் தமிழ் அகதிகள் படகுகளில் இராமேஸ்வரம் சென்றடைந்தனர்.

இன்னும் சுமார் 5 ஆயிரம் தமிழர்கள் இராமேஸ்வரம் செல்வதற்கு யாழ்ப்பாணத்தில் காத்திருக்கின்றனர் என்று போய்ச் சேர்ந்த தமிழ் அகதிகள் தெரிவித்தனர். (உ–எ)

## மாவிட்டபுரம், வீமன்காமத்தில் இராணுவம் தொடர்ந்தும் நிலை

காங்கேசன்துறை, ஜூன் 12

மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாவிட்டபுரம் சந்தியைச் சூழவுள்ள பகுதியிலும், வீமன்காமத்தில் வீடுகள், தொழில் நிலையங்கள் ஆகியவற்றிலும் அவர்கள் தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அப்பகுதிக்குச் செல்ல முயன்ற பொதுமக்கள் துப்பாக்கி மற்றும் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகவும் இராணுவ வண்டிகளின் நடமாட்டத்தினுலும் அங்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல்கள் தயார்நிலையில்

புதுடில்லி, ஜூன் 11

இந்திய கப்பல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டுக்கு உணவுப் பொருள்களை கொண்டு செல்வதற்காகவே இந்த ஏற்பாடு என்று 'இன்டியன் போஸ்ட்' நாளிதழில் மோஹன்ராம் எழுதியிருக்கின்றுர். (உ–எ)

வெளிநாட்டுச் செய்தியாளர்கள்

### ஆஸ்பத்திரியை பார்க்க அனுமதியில்லை

வடமராட்சிப் பகுதியைப் பார்வையிட அரசால் அழைத்துவரப்பட்ட வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் மந்திகை ஆஸ்பத்திரியை பார்வையிட அனுமதிக்கப்படவில்லை.

வைத்தியசாலையில் நூற்றுக்கும் அதிகமான நோயாளிகள் பெரும் காயங்களுடன் படுக்க வசதியின்றி அவதியுறுகின்றனர்.

இவர்களில் பெரும்பாலான பெண்கள், வயோதிபர்கள் எறிகாயங்களுக்கு இலக்கானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ–எ)

## ★ ஸ்ரீலங்காவில் மனித உரிமை மீறல் - அதனுல்

# உதவிகளை நோர்வே நிறுத்தியது; ஆனுல் தமிழருக்குத் தொடர்ந்து வழங்கும்

ஒஸ்லோ, ஜூன் 11

ஸ்ரீலங்கா அரசுக்கான சகல பொருளாதார உதவிகளையும் நிறுத்திவிட நோர்வே அரசு முடிவு செய்து உள்ளது.

இன பேதவன்முறைகள் அதிகரிப்பு, மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெறுதல் ஆகிய காரணங்களுக்காக நோர்வே அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

—இப்படி நோர்வே பிரதமர் திருமதி குரோவர் பிரண்டலன் தெரிவித்தார்.

யு. என் ஐ. செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

ஆனுல் யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு உதவ நோர்வே விரும்புகின்றது. அதன் காரணமாக தொண்டர் ஸ்தாபனங்கள் மூலம் ஸ்ரீலங்காவுக்கு வழங்கப்படும் உதவியை அரசு அதிகரிக்கும்.

—இப்படி பிரதமர் திருமதி பிரண்டலன் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★ வடமராட்சியில்

# ராணுவம் வெளியேறினுலேயே பாடசாலைகள் இயங்கும்

## பெற்ருேர்கள் அறிவிப்பு

வல்வெட்டித்துறை, ஜூன் 12

வடமராட்சியில் உள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவேண்டுமாஞல் இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகளிலிருந்து உடனடியாக வெளியேறி முகாம்களுக்குச் செல்லவேண்டும்.

இவ்வாறு வடமராட்சியில் உள்ள பல பெற்ருேர் ஆசிரியர் சங்கங்கள், அவற்றின் பிரமுகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை வாஞெலி மூலம் அரசாங்கம் வடமராட்சியில் உள்ள பாடசாலைகள் இயங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டது.

இந்த வாஞெலி ஒலிபரப்புக்குறித்துக் கேட்டபோதே பெற்ருேர் ஆசிரியர்சங்கப் பிரமுகர்கள் பலர் இப்படிக் கருத்துத் தெரிவித்தனர்.

இராணுவம் வடமராட்சிக்குள் புகுந்த வேளை நடத்திய அட்டகாசத்திஞல் நாம்மிகுந்த அச்சமடைந்துள்ளோம்.

இந்தவேளையில் — இராணுவ நடமாட்டத்திற்கு மத்தியில் — எமது குழந்தைகளை எந்தத் துணிவுடன் நாம் வெளியே அனுப்பமுடியும்? அவர்களுக்கு யார் பாதுகாப்பு? — இப்படி ஒரு பிரமுகர் கேள்வி எழுப்பிஞர், (இ-உ-எ-160)

### சுழிபுரத்திலும் அகதிகள்

வட்டுக்கோட்டை, ஜூன் 12

கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்களுக்கும் இராணுவத்தினரின் ஹெலித் தாக்குதல்களுக்கும் பயந்து பன்ஞலை, கொல்லங்கலட்டி, ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் நூற்றிஐம்பது குடும்பங்கள் சுழிபுரம் மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் தஞ்சமடைந்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை (8-6-87) மேற்கொள்ளப்பட்ட பெரும் தாக்குதலை அடுத்தே இவர்கள் தங்கள் சொந்தக் கிராமங்களை விட்டு இடம் பெயர்ந்தனர்.

இப்பிரிவில் அகதிகளாக வந்துள்ள அகதிகளுக்கு நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளைகிராமசேவையாளர் திரு. மு. தர்மதாசன் மேற்கொண்டுள்ளார். (உ-161)

### அழிப்பு

வேலணை, ஜூன் 12

தீவுப்பகுதியில் பூவரசம் மரத்திற்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள பல பாண் பேக்கரிகளுக்கு விறகுக்காக பூவரசம் மரங்களையே தறித்துப் பாவித்து வருவதே இதற்குக் காரணமாகும்.

மரணச் சடங்கின் போது தகனத்திற்கென இதுவரை காலமும் பூவரசம் மரத்தையே தீவுப்பகுதி மக்கள் பாவித்து வந்தனர். இவை தறிக்கப்படுவதிஞல் சடலங்களைத் தகனம் செய்வதற்குக்கூட பூவரசம் மரங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (அ-167)

### ஷெல் வெடித்த அதிர்ச்சியிஞல் மரணம்

இளவாலை, ஜூன் 12

இளவாலையைச்சேர்ந்த செபஸ்தியேனை என்ற வயோதிப மாது மாதகலில் ஷெல் விழுந்து வெடித்த அதிர்ச்சியின் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை மயக்கமுற்று அடுத்த நாள் நினைவற்ற நிலையில் அவர் உயிரிழந்தார்.

இப் பெண்ணுக்கு வயது 63. ஆறு பிள்ளைகளுக்குத் தாய். (உ,48)

## அச்சுவேலியிலிருந்து வந்த செய்திகள் . . .

அச்சுவேலியில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டு அங்கு இராணுவம் நிலை கொண்டிருந்த போது அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையும் கொள்ளையடிக்கப்பட்டது. பல வைத்திய உபகரணங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதுடன் பல சேதப்படுத்தப்பட்டுமுள்ளன.

அங்குள்ள இரும்புப் பெட்டியை அப்புறப்படுத்தி கொண்டு செல்வதற்கு எடுத்த முயற்சி கைகூடவில்லை. (உ-11)

### கந்தசாமி கோயிலும் பலத்த சேதம்

அச்சுவேலி, ஜூன் 12

அச்சுவேலி நாவற்காடு காட்டுமலைக் கந்தசாமி கோயில் இராணுவத்தில் ஷெல் தாக்குதலால் சேதமடைந்தது. ஆலயத்தில் நடைபெற்று வந்த வருடாந்த மகோற்சவம் ஐந்தாம் திருவிழாவுடன் இடைநிறுத்தப்பட்டது.

ஆலயத்தின் முகாமையாளரும் பூசகருமான சீனியன் சிவகுரு, நித்தியமேளக்காரர் திரு. எஸ். குமரகுரு ஆலயப்பணிகள் செய்யும் திருமதி அரியகுட்டி வள்ளிப்பிள்ளை ஆகியோர் ஷெல்தாக்குதலால் காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோவிலின் மண்டபம், தேர் முட்டி, தேர் என்பன ஷெல் தாக்குதலால் பலத்த சேதமடைந்துள்ளன. கோவிலுக்கு வழிபடச் சென்ற திருமதி தவமணி சிவசுப்பிரமணியம் (வயது 45) வீதியில்ஷெல் தாக்குதலால் அந்த இடத்திலேயே பலியாஞர். (உ-11)

### ஊரடங்கு வேளை திருட்டுச் செயல்கள்

அச்சுவேலி, ஜூன் 12

அச்சுவேலிப் பகுதியில் இராணுவம் பிரவேசித்ததை அடுத்து மக்கள் அவசர அவசரமாக வெளியேறிய சூழ் நிலையை பயன்படுத்தி பெருமளவில் கொள்ளை; களவுகள் நடைபெற்றுள்ளன.

முழு நாள் ஊரடங்குச் சட்டம் பிரகடனப் படுத்தப் பட்டிருந்த போது திட்டமிட்ட முறையில் சிலர் செயற் பட்டு கொள்ளை, களவுகளை செய்து முடித்துள்ளனர்.

அச்சுவேலி தெற்கில் திரு. எஸ். சபாநாதன், அச்சுவேலி நாவற்காட்டில் திரு. சின்னத்தம்பி இராசையா, திரு. நாகன் சிவலிங்கம் ஆகியோரின் வீட்டில் உள்ள ஆடம்பரப் பொருட்கள் இரவிரவாக சூறையாடப்பட்டுள்ளன.

திரு. சின்னத்தம்பி இராசையாவின் வீட்டிற்குச் சென்ற திருடர்கள் முக்கியமான இடங்களில் நிலத்தைத் தோண்டி பெறுமதியான பொருட்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளனவா என சோதனை நடத்தியதுடன், பதுங்குகுழிக்குள் இருந்து சிற்றுண்டி வகைகளையும் சாப்பிட்டு இளைப்பாறியுள்ளனர்.

ஆசிரியை திருமதி சிவராசாவின் இல்லத்தில் 15 பவுண் நகை கையாடப்பட்டுள்ளது.

அச்சுவேலி நாவற்காட்டில் சிவனடியான் மட்சகேந்திரம், திரு. சி. இரத்தினசிங்கம் ஆகியோரின் பலசரக்குக்கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

வெங்காயம் சேமித்து வைக்கப்படும் கொட்டில்களில் இருந்து வெங்காயம் களவாடப் பட்டுள்ளது. (உ-11)

### வீதிகளில் அலையும் கால்நடைகள்

அச்சுவேலி, ஜூன் 12

அச்சுவேலி, இடைக்காடு, பலாலி பகுதிகளில் ஆயிரக்கணக்கான வளர்ப்புக் கால் நடைகள் கட்டாக்காலியாக அலைந்து திரிகின்றன.

இப் பகுதியில் கடந்தசனிக்கிழமை பிறப்பிக்கப்பட்ட திடீர் ஊரடங்குச் சட்டத்திஞல் அப்பகுதி மக்கள் வீடுகளை விட்டு முற்ருக வெளியேறினர். அவ்வேளையில் தாம் வளர்த்து வந்த கால் நடைகளை அவர்கள் அவிழ்த்து விட்டனர்.

அவிழ்த்து விடத் தவறிய கால் நடைகள் குண்டுச் சத்த அதிர்ச்சி தாங்காமல் அறுத்துக் கொண்டோடின.

இவ்வாறு அவிழ்த்துவிடப்பட்ட ஆயிரக்கணக்கான கால் நடைகள் அலைந்து திரிவதுடன் தோட்ட வெளிகளில் செய்கை பண்ணப்பட்டிருந்த பயிர்களையும் அழித்து சேதம் விளைவித்து வருகின்றன.

பல கால் நடைகள் ஷெல் தாக்குதலால் இறந்து கிடக்கின்றன. சிலபகுதிகளில் அவை சிதைவடைந்து துர்நாற்றம் வீசுகின்றது. (உ-11)

## சங்கானையில் நிவாரண உதவி பெற தகுதியுடைய உள்ளூர் அகதிகள்

### உதவி அரச அதிபர் அறிவிப்பு

வட்டுக்கோட்டை, ஜூன் 12

யாழ் குடாநாட்டில் உள்ள பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சம் அடைந்துள்ள அகதிகளுக்கு வெகு விரைவில் நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதுசம்பந்தமாக சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பத்துக் கிராம சேவையாளர்களுக்கும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்திஞல் கூட்டம் ஒன்று கடந்த புதன் கிழமை கூட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் நிவாரண உதவிகள் வழங்குவது சம்பந்தமான திட்டங்கள், செயற்பாடுகள் பற்றி விளக்கப்பட்டது. பின் வருவோருக்கே நிவாரண உதவிகள்.

★ பருத்தித்துறை, கரவெட்டி, தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள சகல கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்தும் இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கும்—

★ உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள உடுவில், இணுவில், தாவடி, சுன்ஞகம், கந்தரோடை ஆகிய 5 கிராமசேவையாளர் பிரிவுகளைத் தவிர்ந்த ஏனைய கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ளோருக்கும்—

★ சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மாதகல், பெரியவிளான் ஆகிய இரண்டு கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்தும் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கும்—

★ நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள நாவலடி, முள்ளி, பூம்புகார், மணியந்தோட்டம் ஆகிய நான்கு கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்தும் இடம்பெயர்ந்துள்ள அகதிகளுக்கும்—

★ யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கொட்டடி, நாவாந்துறை, சோனகர் தெரு, குருநகர், யாழ்ப்பாணப் பட்டினம் ஆகிய 5 கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கும்—

★ கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு, இருபாலை ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்தும் இடம்பெயர்ந்துள்ள அகதிகளுக்கும்—

இந்த நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராமசேவையாளர் பிரிவுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருப்பவர்கள் தஞ்சமடைந்துள்ள பிரிவு கிராம சேவையாளர்கள் மூலம் நிவாரண உதவி பெற விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்பிப்போர் தமது பெயர், வயது, பால், அடையாள அட்டை இலக்கம், முன்னைய விலாசம், தற்போதைய விலாசம் ஆகியவற்றை விண்ணப்பத்தில் தெரிவிக்கவேண்டும். (உ-161)

## விழிப்புடன் செயற்பட 'கைஸ்' கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 12

தமிழ்பேசும் மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்க முயலும் ஸ்ரீலங்கா அரசின் கபட திட்டங்களுக்கு எதிராக மாணவர்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

இப்படி மாணவர் இளைஞர் பொதுமன்றம் கைஸ் கோரிக்கை விடுத்திருக்கிறது.

ஈழவரின் எண்ண அபிலாசைகளை துப்பாக்கி முனையில் துடைத்துவிட சிறீலங்கா அரசு மூர்க்கம் கொண்டு நிற்கிறது. வருங்காலச் சந்ததியினரின் கல்விக் கண்களை அடைத்து விடுவதிலும் அது ஆர்வம் கொண்டுள்ளது.

தென் ஈழப்பகுதியான கிழக்குப் பிராந்தியத்தில் பாடசாலைகளில் முகாம் அமைத்துமாணவர்களின் கல்வியை சிறீலங்கா அரசு சீரழித்துவருகிறது.

அதேபோல் குடாநாட்டில் இராணுவம் தான் நிலைகொண்ட இடங்களைச் சூழவிருந்த பல பாடசாலை மாணவர்களின் கல்வியைச் சீரழிக்கும் ஈனச்செயலைச் செய்து வந்தது.

இராணுவம் ஆக்கிரமித்துள்ள வடமராட்சிப் பகுதியிலும், கீரிமலை, தெல்லிப்பழை பகுதியிலும் பல பாடசாலைகள் திறக்கமுடியாத இக்கட்டான நிலையில் உள்ளன.

பாடசாலைகள் எப்போது முகாமாக மாறும் என்று தெரியாத பதற்றமும் பீதியும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் பருத்தித்துறையில் ஒரே ஒரு பாடசாலையை மட்டும் இராணுவத்தின் துப்பாக்கி முனையில் திறந்து நடத்த முற்படுவது போலியான நடிப்பும் வெறும் கண்துடைப்புமே அன்றி வேறில்லை என்பது தெளிவு.

— இப்படி கைஸ் இயக்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பிரபா தமிழகத்தில்என்பது அப்பட்டமான பொய்; வீண் வதந்திகளை நம்பாதீர்கள்!

## விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 12

பிரபா தமிழகத்தில் என்பது அப்பட்டமான பொய். வீண் வதந்திகளை நம்பாதீர்கள்.

—இப்படி விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது-:

விடுதலையடைந்த ஒவ்வோர் நாட்டு விடுதலைப் போராட்டமும் அந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரினதும் இரத்தத்தாலும் கண்ணீராலும் வியர்வையாலும் தான் எழுதப்பட்டுள்ளது.

இரத்தஆற்றில் மிதந்த சடலங்களினூடாகத்தான் மக்கள் தம் சுதந்திரத்தைப் போராடிப் பெற்றுக்கொண்டார்கள்.

இந்த வரலாற்று உண்மையை தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு விதிவிலக்காக அமைந்துவிட முடியாது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது இன்று, நாளை முடியும் என்ருே அல்லது இழப்புகளற்றதாய் அமையும் என்ருே நாம் எதிர்பார்ப்பதில் துளிகூட அர்த்தமில்லை.

தமிழ் மக்களின் கடந்த கால—துயரம் தோய்ந்த ஏமாற்றப்பட்டசோக வரலாறுகளும்-

அன்றிலிருந்து படிப்படியாகக் கூடி இன்று உச்ச வேகத்தில் நிகழ்த்தப்படும் இன அடக்குமுறையும்—

ஒரு எதிரி நாட்டுக்கு ஒப்பாக இடம்பெற்று வரும் ஆகாயமார்க்கமான பாரிய குண்டு வீச்சுக்களும்—

மக்களின் அத்தியாவசிய பொருட்களுக்கான தடை விதிப்பும்—

ஸ்ரீலங்கா அரசு எங்கள் ஒவ்வொருவரையும் தன் பூரண எதிரியாக பிரகடனப்படுத்தியிருப்பதை தெட்டத் தெளிவாக்கியிருக்கிறது-

இந்த எதிரியுடன் சேர்ந்து வாழ்வதோ அல்லது சில்லறைச் சலுகைகளை ஏற்பதோ அல்லது அரைகுறைத் தீர்வுக்கும் உடன் படுவதோ எம்மை மீளமுடியாத அடக்குமுறை எனும் அதல பாதாளத்தில் தள்ளிவிடும்.

இந்தத் தெளிவான உண்மையைத் தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் பரிபூரணமாகப் புரிந்து கொள்ளவேண்டும்,

எனவே தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் துன்ப துயரங்களையும், சொல்லொண்ஞதவேதனைகளையும், தளராத மன வலிமையுடன் தாங்கி, விடுதலைப் போரில் நேரடியாகப் பங்காளர்களாகி ஒன்று திரண்டு போராட வேண்டும். அவ்வாறு செய்யின் எமது சுதந்திரப் போராட்டம் எவ்வளவு காலம் சென்ருலும் இறுதியில் வென்றெடுக்கப்படுவது உறுதி.

அமெரிக்கா, சீஞ, தென்ஞபிரிக்கா, இஸ்ரவேல், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் துணையுடன் ஸ்ரீலங்கா அரசு தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அழித்துவிட முயற்சிக்கிறது.

இந்த மாபெரும் ஏகாதிபத்திய கூட்டுக்கு சவாலாக நாம் எமது சுதந்திரப் போராட்டத்தை அளப்பெரும் தியாகங்கள் மூலம் வளர்த்து வந்திருக்கிருேம்.

எமது இறுதி இலட்சியமான தமிழீழத்தை அடையும்வரை எமது போராட்டம் ஓயப்போவதில்லை.

இன்றுவரை எமது போராட்டத்தில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களை இழந்திருக்கிருேம். 550 தியாக வேங்கைகள் தம் உயிரை இப்போராட்டத்திற்காக அர்ப்பணித்திருக்கின்ருர்கள்.

இந்நிலையில் நாம் போராட்டக் களத்திலிருந்து பின்வாங்குவதென்பதற்கோ அல்லது விடுதலைப்போரை ஒத்திவைப்பது என்ற பேச்சுக்கோ இடமில்லை.

இதேநேரம் இன்றைய நெருக்கடிமிக்க சூழ்நிலையில் வீண் வதந்திகளும் பொய்ப்பிரசாரங்களும் ஒருசில தீய சக்திகளால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுகுறித்து எவரும் வீண்பீதியடைய வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிருேம்.

இதேசமயம் இராணுவத்தின் இன ஒழிப்பு முயற்சிகளுக்கு எதிராகத் தொடர்ந்தும் முற்றுமுழுதாக நாம் தீவிரமாகப் போராடி வருகின்ருேம்.

முகாம்களை விட்டு வெளியேறிய இராணுவத்தினருக்கெதிரான நேரடியுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது.

விடுதலைப்புலிகள் ஒவ்வொருவரும் தம்மை முழுமையாகத் தியாகம் செய்து போராடும் இந்தப்போரை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரும் தமிழீழ மக்களின் தேசியத் தலைவருமாகிய பிரபாகரனே தலைமை ஏற்று வழிநடத்திக் கொண்டிருக்கிருர்.

தலைவர் பிரபாகரனுக்கு உறுதுணையாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதிகள் அனைவரும் நேரடிப் போரில் குதித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை தமிழீழத்திற்காகத் தம் உயிரை அர்ப்பணிக்க எக்கணமும் தயங்கியதில்லை.

இதேநேரம் ஒருசில துரோக சக்திகளால்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### பழைய இடங்களுக்கு திரும்பும் மக்கள்

பண்டத்தரிப்பு, ஜூன் 12

இராணுவத்தாக்குதல்களை அடுத்து உயிர்களுக்கு அஞ்சி ஓடிய அச்சுவேலி, மாவிட்டபுரம், வீமன்காமம், தெல்லிப்பழை பகுதி மக்களில் சிலர் மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பு (உ-121)

### சிப்பாய் மரணம்

இளவாலை, ஜூன் 12

கீரிமலை கூவில் கிராமத்தில் சோமு என்பவரின் வீட்டுக்கதவைத் தமது துப்பாக்கியிஞல் இடித்துத் திறக்க முயன்ற சிப்பாய் ஒருவர் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததிஞல் அந்த இடத்திலேயே மரணமாஞர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சம்பவத்தை [illegible] அப்பகுதியில் பலவீடுகள் சேதமாக்கப்பட்டன. (உ-48)

### வெற்றிலை விலை உயர்வு

அச்சுவேலி, ஜூன் 12

மாவிட்டபுரப் பகுதியில் இராணுவம் நிலைகொண்டதையடுத்து வெற்றிலையின் விலை பலமடங்கு அதிகரித்துள்ளது.

காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதியில் இராணுவத்தாக்குதல் சம்பவங்களிஞல் வெற்றிலைத் தோட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வெற்றிலை பறிக்கமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் சாதாரண வெற்றிலை ஒன்று 50 சதத்தில் இருந்து 75 சதம்வரை விலைபோகிறது. (உ-11)

### சாவகச்சேரியில் ஆயிரம் குடும்பங்கள் தஞ்சம் புகுந்துள்ளன

சாவகச்சேரி, ஜூன் 12

வலிகிழக்கு வடமராட்சிப் பகுதிகளில் இருந்து சுமார் ஆயிரம் குடும்பங்கள் சாவகச்சேரிப் பகுதியில் தஞ்சம் அடைந்துள்ளன.

பாடசாலை, ஆலயங்கள், [illegible] தங்கியுள்ள இம் மக்களுக்கு [illegible] அளித்து வருகின்றனர். மட்டுவில் மகா வித்தியாலயம், கல்வயல் மகா வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வர வித்தியாசாலை ஆகியவற்றில் இருப்பவர்களுக்கு லயன்ஸ் கழகம் பொதுமக்களுடன் இணைந்து உதவிகள் வழங்கி வருகிறது. [illegible] கழக ஆதரவுடன் அறப்போராட்டக்குழுவும் உதவிகளை அளித்து வருகிறது. (உ-31)

### மக்கள் வங்கிக் கிளை: மீண்டும் சங்கானையில் இயங்கச் செய்யக் கோரிக்கை

பண்டத்தரிப்பு, ஜூன் 12

சங்கானை மக்கள் வங்கிக் கிளையை மீண்டும் சங்கானையில் இயங்கச் செய்யுமாறு கோரி மக்கள் வங்கியின் தலைமை அலுவலகப் பொதுமுகாமையாளருக்கும், யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலக முகாமையாளருக்கும் இப்பகுதி மக்களின் சார்பில் மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

1984 இல் சங்கானைக் கிளை கொள்ளையடிக்கப்பட்டது முதல் அக் கிளை யாழ்ப்பாணம் கன்ஞதிட்டிக் கிளையுடன் இணைந்து இயங்குகின்றது.

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய்த் தொகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் யாழ்ப்பாணம் வந்து கன்ஞதிட்டியில் கருமமாற்றுவதிஞல் பெரும் சிரமமும் பொருட் செலவும், காலவிரயமும் ஏற்படுகிறது.

1984 இல் கொள்ளை அடிக்கப்பட்ட கிளைகள் பல மீண்டும் அந்தந்த இடங்களிலேயே இயங்குகின்றன.

எண்ஞயிரம் வாடிக்கையாளர்கள், இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பல பொது ஸ்தாபனங்கள் இந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளன.

பெருந் தொகையான விவசாயிகள் இவ் வங்கியில் வாடிக்கையாளராகவுள்ளனர்.

ஆகவே இந்தக் கிளையை மீண்டும் சங்கானையில் இயங்க ஆவன செய்ய வேண்டும் — இப்படி மகஜரில் கேட்கப்பட்டிருக்கிறது.

இந்த விடயம் சம்பந்தமாகத் தூதுக்குழு ஒன்றும் மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய முகாமையாளரையும், அரசாங்க அதிபரையும் சந்தித்துப் பேசவிருக்கிறது. (உ-121)

### தமிழர் மீதான அடக்குமுறைகளை நீக்குக!

தமிழர் மீதானஅடக்குமுறைகளை உடனடியாக நிறுத்தும் படி இந்திய மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி ஜஞதிபதி ஜெயவர்த்தஞவைக் கேட்டுள்ளது.

கட்சியின் இரண்டு நாள் அரசியல் குழுக் கூட்டத்தின் முடிவில் இது சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

டிசம்பர் 19 யோசனைகளின் அடிப்படையில் உடனடியாக பேச்சுக்களை இலங்கை அரசு ஆரம்பிக்கவேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உலகின் மிகப்பெரிய மூன்று சக்திகள்: சமுத்திரம், மலை, சிரத்தையுடன் வேலை செய்யும் மனிதன். இந்த மூன்றினுக்குள்ளும் மறைந்துள்ள சக்தி அளவிட முடியாதது.

— எட்வர்ட் பொக்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

12.6.1987 த.பெ.இல: – 23


## காலம் வாங்கும் தந்திரமா?

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதான இராணுவ நடவடிக்கை முற்றுப் பெற்று விட்டது. இராணுவத்தினர் தாம் மீண்டும் கைப்பற்றியுள்ள பகுதிகளில் தமது நிலையைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பட்டினத்தைப் பிடிக்க வேண்டிய அவசியமில்லை.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

அமைச்சர் அத்துலத்தின் தகவலை வெளிநாட்டு அமைச்சர் ஜனப் சாகுல் ஹமீதும் ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைக்கைப்பற்றி தமிழ்த் தீவிரவாதிகளை தோற்கடிக்கும் சக்தி அரசாங்கத்துக்கு உண்டு என்பதை அவர்களுக்கு நிருபித்துக் காட்டுவோம் என்றும்—

தமிழ்ப் போராளிகள் பேச்சுவார்த்தைக்கு வரும் வரை அவர்கள் மீதான தாக்குதல் தொடரும் என்றும்—

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைக் கைது செய்த பின்னரே ''ஒப்பரேசன் லிபரேஷன்'' நிறுத்தப்படும் என்றும்—

''ஒப்பரேசன் லிபரேஷன்'' முதலாவது கட்டம்; ''ஒப்பரேசன் குட்வில்'' இரண்டாவது கட்டம்; ''யாழ்ப்பாண நகரைப் பிடிப்பது'' மூன்றாவது கட்டம் என்றும்— பல விதமாக வீரப்பிரதாபமும், வீம்பும் பேசியவர் அமைச்சர் அத்துலத்.

அவற்றை எல்லாம் மறந்து, மனம் சோர்ந்தவர் போல, கை வீழ்ந்தவர் போல அவர் சுருதி மாறிப் பேசுகிறார் இப்போது! அதற்கான காரண காரியங்கள், பின்னணிகள் ஆராயப்பட வேண்டியவை.

குடாநாட்டின் மீது இராணுவத் தாக்குதல் நடத்தி, இங்கு சிவில் நிர்வாகத்தைத் தம்வசமாக்கி, தேர்தல் வைத்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே தமது இலட்சியம் என்று கூறிய அரசாங்கம் அதனைச் சாதிக்க முடியவில்லை.

வடமராட்சியில் காட்டு மிராண்டித்தனம் புரிந்து தமிழ் மக்களைக் கொன்றொழித்தும், உடைமைகளைச் சேதப்படுத்தியும் அதனைத் தம்வசமாக்கி சிறு முன்னேற்றம் கண்ட போதிலும் அங்கு சிவில் நிர்வாகம் எதையும் நடத்த முடியவில்லை.

மொத்தத்தில் அரசாங்கம் நினைத்தது ஒன்று. நடந்தது வேறு. முழு அளவிலான தோல்வியையே அது அடைந்திருக்கிறது. நினைத்ததில் ஒன்றையாவது முழுமையாக ஈட்ட முடியவில்லை.

போராளிகளை விட நான்கு மடங்கு ஆளணியும், ஆயுதமும் இருந்த போதிலும் அரசினால் தனது இராணுவ நடவடிக்கையைத் தொடர முடியவில்லை.

விமானத் தாக்குதலால் மக்களையும், உடைமைகளையும் அழித்து போராளிகளை விட போரில் முன்னேற அது திட்டமிட்டிருந்தது. எனினும் ஜூன் 4 ஆம் திகதி இந்திய விமானங்கள் இங்கு வந்து போன பிறகு அது ஆபத்தானது என்று ஸ்ரீலங்கா அரசு உணர்ந்திருக்க வேண்டும்.

இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு இந்தியா மரியாதையாக, பண்பாகக் கேட்ட போது அதற்குச் செவிசாய்க்க மறுத்த ஸ்ரீலங்கா அரசு, இப்போது அதனை நிறுத்துவதாகத் தானாகவே அறிவித்திருக்கிறது!

இது நிரந்தரமான முடிவா அல்லது தற்காலிக முடிவா என்பது தெரியாது. ஆகையால் இராணுவத் தாக்குதல் நிறுத்தத்தை ஒரு யுத்த தந்திரம் என்றே கொள்ளவேண்டியுள்ளது.

இந்தியா விமான, கடற்படைத் தாக்குதல்களைத் தொடுக்க நேரும் கட்டம் ஒன்று உருவாகும் பட்சத்தில் ஈடுகொடுத்து எதிர்க்கக் கூடியதாகத் தனது இராணுவ பலத்தை அதிகரித்து ஸ்திரப்படுத்துவதற்கான 'காலம் வாங்கும்' தந்திரமாகவும் இது அமையலாம் அல்லவா?

போராளிகளை நசுக்குவதற்காகத் தனது இராணுவ பலத்தை ஸ்திரப்படுத்தும் பொருட்டு, பேச்சுவார்த்தை என்ற மந்திரத்தை நான்கு வருடங்களாக ஓதி இந்தியாவையும் சேர்த்து ஏமாற்றிய கெட்டித்தனம் உள்ள நாடு அல்லவா ஸ்ரீலங்கா?

இராணுவத் தாக்குதலை நிறுத்துவது என்பது இந்தியாவைத் திசை திருப்பும் முயற்சியாகவும் இருக்கலாம்.

தமிழ்ப் போராளிகள் அரச படைகளை விட எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் குறைந்திருந்தாலும் தீவிரமாகப் போராடினார்கள் என்று பாராட்டியிருந்தவர் அத்துலத்.

மிகப் பெரும் தாக்குதலைத் தொடர்வதால் இலட்சிய வேட்கையுடன் சமரிடும் போராளிகளுடன் தமது சிப்பாய்கள் எம்மாத்திரம் என்று எண்ணி மேலும் படை பலத்தை அதிகரிக்கக் காலம் வாங்குவதற்கும் தாக்குதல் நிறுத்தம் என்று தந்திர மந்திரம் ஓதலாமல்லவா?

எனவே லலித் கூறும் இராணுவத் தாக்குதல் நிறுத்தம் நிரந்தரமாக வேண்டுமானால் இந்தியா இனியும் ஸ்ரீலங்காவிடம் ஏமாந்துவிடாமல் ராஜதந்திரத்துடனும் மதிநுகத்துடனும் நடக்க வேண்டும்.

அப்போது தான் மீண்டும் ஒரு 'வடமராட்சிக் காட்டுமிராண்டித்தனம்' நிகழாமல் தடுத்துத் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியும்!

# பிஜித்தீவில் மீண்டும் நெருக்கடி நிலைமை!

## கரும்புத் தோட்டங்களில் ராணுவம்

சுவா, ஜூன் 11

பிஜியில் கரும்பு அறுவடை ஸ்தம்பித்து உள்ளது.

இராணுவப் புரட்சியை ஆட்சேபித்து தொழிலாளர்கள் கரும்பு அறுவடையில் ஈடுபடுவதில்லை என்று அறிவித்து விட்டார்.

இதனிடையில் கரும்புத்தோட்டங்களில்இராணுவம் முகாமிட்டுள்ளது.

கரும்புத் தோட்டத் தொழிலாளரின் எண்ணிக்கை சுமார் 25 ஆயிரம். அனைவரும் இந்திய வம்சாவழியினர்.

பிஜியின் தேசிய விமானத்தில் 51 சதவீதம் சீனி ஏற்றுமதியினால் கிடைக்கின்றது.

கரும்பு அறுவடை ஸ்தம்பிதம் அடைந்து உள்ளதால் பெரும் பொருளாதார நெருக்கடியை பிஜி எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மீண்டும் கரும்பு அறுவடையில் ஈடுபடுவது பற்றி பரிசிலனை செய்ய முதலில் கரும்புத் தோட்டங்களில் இருந்து இராணுவம்வெளியேற வேண்டும் என்று தொழிலாளர் வற்புறுத்தி வருகின்றனர். (உ-எ)

வெளி உலகில்

பஜன்லால் கொலைமுயற்சி:

## 4 தீவிரவாதிகளுக்கு அமெரிக்காவில் சிறை

நியூஓர்லியன்ஸ், ஜூன் 11

ஹரியானா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் பஜன்லாலைக் கொலைசெய்யமுயற்சித்த வழக்கில் நான்கு சீக்கியத் தீவிரவாதிகளுக்கு அமெரிக்க நீதிமன்றம் ஒன்று சிறைத் தண்டனை விதித்தது.

1985இல் முதலமைச்சராகஇருந்தசமயம் பஜன்லால்அமெரிக்கா சென்று இருந்தார். அங்கு ஹோட்டல் ஒன்றில் அவர் தங்கி இருந்தபோது இக்கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக 4 பேர்மீது குற்றம்சாட்டப்பட்டது.

முதலாவது, இரண்டாவது எதிரிகளுக்கு தலா பத்து ஆண்டுகால சிறைத்தண்டனையும்—

ஏனைய இரண்டு எதிரிகளுக்கும் தலா 5 ஆண்டு காலமும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (உ-எ)

## கிளர்ச்சியாளர் மீது ஆப்கான் அரசு தாக்குதல் முஸ்தீபு

காபூல், ஜூன் 11

ஆப்கான் கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக புதிய தாக்குதலை ஆப்கான் அரசு நடத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது.

—இப்படி டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் இருந்து ஆப்கான் கெரில்லாக்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றனர்.

ஆப்கான் அரசு விடுத்த நல்லெண்ண அழைப்பை கிளர்ச்சிக்காரர்கள் நிராகரித்து விட்டனர். ஒரு தலைப் பட்சமாக ஆப்கான் அரசு அறிவித்த யுத்த நிறுத்த அறிவித்தலையும் கிளர்ச்சிக்காரர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்த ஆப்கான் அரசு தீர்மானித்துள்ளது.

—இப்படி 'டாஸ்' மேலும் அறிவித்தது, (உ-எ)

### அவசரகால நிலை நீடிப்பு

தென் ஆபிரிக்காவில் அவசரகாலச் சட்டம் மேலும் நீடிக்கப்பட்டது.

இதனை தென் ஆபிரிக்க ஜனாதிபதி போத்தா நேற்று அறிவித்தார்.

கடந்த ஆண்டு தென் ஆபிரிக்காவில் அவசர காலச்சட்டம் அமுலுக்கு வந்தது. (உ-எ)

## எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்துவதற்கு கூட்டுத் திட்டம்

வெனிஸ், ஜூன் 11

எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் மருந்து ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கான கூட்டு ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று ஏழு கைத்தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளும் தீர்மானித்து உள்ளன.

பிரிட்டன், அமெரிக்கா, இத்தாலி, ஜப்பான், கனடா, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் வெனிஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டபோது இது சம்பந்தமான தீர்மானம் எடுக்கப்பட்டது. (உ-எ)

## இந்தியா மீதான கண்டனம் வாபஸ்

ஹராரே, ஜூன் 11

விமானம் மூலம் உணவுப் பொருள்களை யாழ் குடா நாட்டில் போட்ட இந்திய அரசின் நடவடிக்கையைக் கண்டித்து எழுதிய ஆசிரியர் தலையங்கத்தை வாபஸ் வாங்குவதாக ஸிம்பாப்வே நாளிதழ் நேற்று அறிவித்தது.

இந்தியாவைத் தாக்கி ஆசிரியர் தலையங்கம் எழுதியதற்காக அந்நாளிதழின் ஆசிரியர் மன்னிப்புக் கோரி இருந்தார்.

இது விஷயம் பற்றி இந்திய செய்தித் துறை அமைச்சர் அஜித் பார்ஜா, சிம்பாப்வே தகவல் அமைச்சரிடம் ஆட்சேபம் தெரிவித்து இருந்தார். சிம்பாப்வே அமைச்சரும் இதற்காக வருத்தம் தெரிவித்தார். (உ-எ)

## தமிழக உதவி தொடர்கிறது

சென்னை, ஜூன் 11

இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு செங்கல்பட்டு மாவட்ட அரசு ஊழியர்கள் ஒரு நாள் சம்பளத்தை வழங்கத் தீர்மானித்துள்ளனர்.

இத்தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் பாண்டியன் தெரிவித்தார்.

இந்திய ஜனாதிபதி தேர்தல்

## பொது வேட்பாளரை தெரிவு செய்ய முயற்சி

புதுடில்லி, ஜூன் 11

இந்தியாவின் புதிய ஜனாதிபதி குறித்து அரசியல் கட்சிகளிடையே பொதுக்கருத்து உடன்பாடு ஒன்றைக் காணும் முயற்சிகள் புதுடில்லியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதமர் காந்தி, இது குறித்து பல அரசியல் கட்சித் தலைவர்களையும் முதலமைச்சர்களையும் அழைத்துப் பேச்சுக்கள் நடத்தி வருகின்றார்.

இதனிடையில் ஆந்திரா மாநில முதலமைச்சர் திரு. என். ரி. ராமராவ், ஜனதா மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தலைவர்களான சந்திரசேகர், இ. எம். எஸ். நம்பூதிரிபாத் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியிருக்கின்றார்.

பொதுக் கருத்து ஒன்றுக்குஉடன்பாடு காணப்படாத பட்சத்தில்எதிர்க்கட்சிகள் கூட்டாக நிறுத்தப்போகும் வேட்பாளர் யார் என்பதை தெரிவு செய்யும் சந்திப்பாக இது அமைந்தது என்று அறிவிக்கப்படுகின்றது.

தென்னிந்தியாவைச் சேர்ந்த ஒருவரையே ஜனாதிபதியாக நியமிக்கும் எண்ணத்தை பிரதமர் காந்தி ஏற்கனவே வெளியிட்டிருக்கிறார்.

இதனிடையில் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது கடந்த புதன் ஆரம்பமாகியது.

முதல்நாளே நான்கு சுயேச்சை வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர், (உ-எ)

# நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்

ஞானக்கதிர்

இன்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் குருபூசைத் தினமாகும். அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

இராசையா ஸ்ரீதரன்

சைவத்தின் மேன்மையும் தமிழின் தொன்மையும் சிறந்து விளங்க, தரணியிலே வந்து அவதாரம் செய்த பெருமகன்தான் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர். பாலருவாயர், பரசமய கோளரி, ஆளுடைய பிள்ளையார், ஞானசம்பந்தர் எனப் பல்வேறு திருநாமங்களையுடைய இவர் சீர்காழியிலே தோன்றினுர்.

சிவபாதவிருதயருக்கும் பகவதியாருக்கும் மைந்தனுக அவதரித்த சம்பந்தர் வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்கப் பணி புரிந்தவர்.

''தோடுடைய செவியன்'' என்று இறைவன் அடியெடுத்துக் கொடுக்க மூன்று வயதிலேயே தேவாரம் பாடிய பெருமையையுடையவர் ஆளுடைய பிள்ளையார்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் சொற்றமிழ் பாடி இறைவனை ஏத்திஞர். அற்புதங்கள் பல செய்து இறைவனின் நற்பதத்தை நாடி நின்றார். பிற மதங்கள் மேலோங்கி சைவம்குன்றியிருந்த வேளை வாதப் பிரதிவாதங்கள் மூலம் சைவத்தின் மேன்மையைப்புலப்படுத்தி அதனை நிலைநாட்டினுர்.

அனல் வாதம், புனல் வாதம் என்பன மூலம் ஆண்டவனின் நிர்த்தாட்சண்யத்தை அகிலம் எங்கும் பரவ வழி வகுத்தார். பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் நாட்டில் சமணம் பரவியதை அறிவித்தும், திருநீறு பூச முடியாத நிலைமையைத் திருமுகம் அனுப்பியும் பிள்ளையாரை அழைத்தனர்.

மதுரைக்கு வந்த பிள்ளையார் மடத்திலே தங்கி இருந்தார். அம்மடத்துக்குத் தீ வைக்கப்பட்டது. அதனுல் சம்பந்தர் அது, 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்று பாடினுர்.

பாண்டியனை வெப்பு நோய் பீடிக்க அவன் துடித்தான். சம்பந்தர் சைவ சமய உண்மையை உணர்த்த 'மந்திரமாவது நீறு' என்று பாடித் திருநீறு பூசவே நோய் நீங்கியது.

—இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் சைவத்தினை நிலை நிறுத்த அற்புத சம்பவங்கள் பல இறைவனுல் ஏற்படுத்தப் பட்டன.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னயும் தந்த தலைவனை ஏத்தி — காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நினைப்பவர் மனத்தைக் கோயிலாகக் கொண்டு நிற்பவனை வாழ்த்தி நிலைபேறான முத்தியின்பத்தை நாம் நாடுதல் வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் சம்பந்தர் பாடிய கோளறு திருப்பதிகமான ''வேயுறு தோளி பங்கன்'' எனத் தொடங்கும் சம்பந்தரின் தேவாரப் பதிகத்தை தினமும் உய்தி பெறலாமேயொழிய வேறு வழியில்லை.

''நம்பினுர்க் கெடுவதில்லை, இது நான்கு மறைத் தீர்ப்பு''



## இன்று முற்ரேதல்

யாழ்ப்பாணம், ஜூன் 12

திருஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு இன்று நல்லூர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் அற்புதத் திருப்பதிகங்கள் [illegible] பெறும். [illegible] வி.ரீ.வி. சுப்பிரமணியம் ஓதுவார் மூர்த்திகள் தலைமையில் [illegible]

## பிரசைகள் குழுக்கள் மக்கள் குறைகளைத் துணிந்து கூறவேண்டும்

முள்ளியவளை, ஜூன் 12

மக்களுக்கு இழைக்கப்படும் அட்டூழியங்களை மேலதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லவும் பிரசித்தப்படுத்தவுமே தமிழ்ப் பகுதிகளில் பிரசைகள் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆகையால் மக்களின் குறைகளை ஒளிவு மறைவின்றி அரசுக்கு எடுத்துக் கூறக் கூடிய துணிச்சல், சக்தி பிரசைகள் குழுக்களுக்கு இருக்கவேண்டும்.

அம்பலவன் பொக்கணையில் நடந்த பிரசைகள்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய முல்லைத் தீவு பிரசைகள் குழுத் தலைவர் திரு. பொ. சேதுபதி இவ்வாறு கூறினுர்.

முகாமிலிருந்து முல்லைத்தீவில் வந்து தங்கியிருக்கும் அகதிகளைப் பராமரிக்கும் பாரிய பொறுப்பு எமக்குண்டு. அதேவேளை வடபகுதியிலிருந்தும் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக வந்திருக்கிறார்கள். அவர்களையும் ஆதரிக்கவேண்டிய பொறுப்பு எமது பகுதிகளில் இயங்கும் பிரசைகள் குழுக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் திரு. சேதுபதி தெரிவித்தார்.

இக்கூட்டத்துக்கு புதுக் [illegible] பிரசைகள் குழுவின் தலைவர் திரு. நா. மகாலிங்கசிவம் தலைமைவகித்தார்.

## பிரபா தமிழகத்தில்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும் ஏனைய முக்கிய தளபதிகளும் தமிழகத்தில் என்ற அப்பட்டமான பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழீழஇலட்சியத்தில் தான் கொண்டுள்ள உறுதியை தமிழீழத்துக்காக தன்னையேஅர்ப்பணிக்கத் தயாரான மனுேநிலையை உடைய ஒரு தலைவனைத் தான் தமிழீழ மக்கள் பெற்றுள்ளார்கள்.

தேசிய தலைவன் பிரபாகரன் பாதையில் ஒவ்வோர் விடுதலைப்புலியும் தன் இறுதி மூச்சுவரை தொடர்ந்து போராடி வருகிறுன்.

இம்மண்ணின் துன்ப துயரங்கள் அனைத்தும் தன்னுடையவை என்றும் இம்மக்களுக்கு ஏற்படும் அவலங்கள் தனக்கும் பொதுவானது என்றும் கருதும் உயரிய இலட்சியத் தலைவர் பிரபாகரன்.

எத்துணை நெருக்கடி நிலையிலும் எமது தலைவரும் ஏனைய வீரர்களும் இந்த மண்ணில் மக்களுடன் களத்தில் நின்று போராடுவார்கள் என்பதை நாம் கொண்ட இலட்சியத்தின்மீது ஆணையாகக் கூறுகிருேம்.

தமிழீழ மக்கள் இன்று தம் இலட்சியத்தை வென்றடையக் கூடிய தலைமையைப் பெற்றிருக்கிறார்கள்.

தம் சுய பாதுகாப்பை தேடும் சந்தர்ப்பவாதத் தலைமையல்ல இன்று இருப்பது.

எனவே தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் வீண் வதந்திகளை நம்பி திக்குத் திக்காகத திசை கெட்டு ஓடி உங்கள் சுதந்திரமான எதிர்காலத்தைப் பாழடிக்காதீர்கள். இங்ஙனம் ஓடி உங்கள் சுதந்திரத்தை நீங்கள் அடையப்போவதில்லை. எமது மண் விடுவிக்கப்படும்வரை நாம் எங்கு சென்றாலும் எமக்கு விடுதலை கிடையாது.

எனவே கிளிநொச்சி வவுனியா, கொழும்பு, இந்தியா என ஓடாதீர்கள். உங்கள் சொந்த மண்ணில் உறுதியாய் நில்லுங்கள்.

—இப்படி விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## அகதி மாணவருக்கு உதவ அதிபர் கோரிக்கை

முள்ளியவளை, ஜூன் 12

அகதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக எம்மாலான உதவிகளை நாம்செய்ய முன்வர வேண்டும்.

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி அதிபர் திரு. இ. தங்கராசா இவ்வாறு கூறினுர்.

கல்லூரியின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அதிபர் இவ்வாறு கூறினுர்.

அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது: ஏற்கனவே பாடசாலையில் இடநெருக்கடியிருந்தும் அகதிப் பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்த்துள்ளோம்.

இந்த இடநெருக்கடியைத் தீர்ப்பதற்காக ஒரு லட்சத்து முப்பது ஆயிரம் ரூபா செலவில் ஓர் புதிய கட்டடம் கட்டப்படுகிறது.

இதற்கு உதவ முன்வந்த பெற்ரேர் பழைய மாணவர், நலன்விரும்பிகளை நன்றியுடன் பாராட்டுகின்றேன் — என்ருர்.

சமாதான நீதிவான் திரு. சோ. பாலகிருஷ்ணன் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லினை நட்டார். (அ-ள-93)



பொய்யாமொழி

**குறள்:**

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

**பொருள்:**

மயிலிறகு ஏற்றிய வண்டியே ஆனாலும், அந்தப் பண்டமும் (அளவோடு ஏற்ருமல்) அளவு கடந்து மிகுதியாக ஏற்றினுல் அச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

12 — 06 — 1987 வெள்ளிக்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

## தமிழரின் நியாயமான கோரிக்கைகளை ஏற்பதே தீர்வுக்கு வழி

நாகர்கோயில், ஜூன் 11
இலங்கைத் தமிழரின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்படவேண்டும். அப்போது தான் தமிழர் பிரச்சினை ஒரு முடிவுக்கு வரும்.

– இப்படி அகில இந்திய இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஏ. கே. அன்ரனி தெரிவித்தார்.

நாகர்கோயிலில் நடந்த இந்திரா காங்கிரஸ் சிறப்பு மாநாட்டில் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாண முடியாது. இதை ஜனாதிபதி ஜெயவர்த்தன உணர வேண்டும்.

மனிதாபிமான முறையில் மனம்விட்டுப்பேசி தமிழரின் நியாயமான கோரிக்கைகளை ஏற்பதன்மூலமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். –இப்படி திரு. அன்ரனி தெரிவித்தார்.

இணை அமைச்சர் எம். அருணாசலம் பேசுகையில்–

கஷ்டப்படும் மக்களுக்கு இந்தியா மனிதாபிமான உதவியைத் தொடர்ந்து வழங்கி வரும்''–என்றார்.

(உ–எ)

## பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவுமாறு கூட்டணி கோரிக்கை

சென்னை, ஜூன் 11
கடும் உணவு பற்றாக்குறைவால் பட்டினிச் சாவை எதிர்நோக்கி உள்ள யாழ் குடா மக்களுக்கு உதவும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி மீண்டும் சர்வதேச சமூகத்தை கோரியுள்ளது.

கூட்டணியின் அரசியல் குழு வியாழன் கூடி இது சம்பந்தமான முடிவை எடுத்தது.

இலங்கை அரசும் அரச பொதுசன தொடர்பு சாதனங்களும் யாழ். குடாவில் தாராளமாக உணவுப் பொருள் இருப்பதாக பொய்த்தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

உண்மை நிலை அது அல்ல. கடும் உணவுத் தட்டுப்பாடு நிலவுகின்றது. பட்டினிச்சாவு ஏற்படும் அபாயம் அங்கு நிலவுகின்றது.

காரணமின்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றார்கள் –

–இப்படி கூட்டணியின் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ–எ)

## ஓய்வூதியம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 12
1985 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற அரசு ஊழியருக்குக் கூடுதல் ஓய்வூதியம் கிடைக்கவுள்ளது.

அடிப்படை ஓய்வூதியத்துடன் இதுவரை வழங்கப்பட்டு வரும் அலவன்ஸ் முதலியன சேர்க்கப்பட்டு ஓய்வூதியமாக வழங்கப்படும்.

ஸ்டேர்லிங்கில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அடிப்படை ஓய்வூதியத்தின் ஐம்பது சதவீதம் ஓய்வூதிய உயர்வாக வழங்கப்படும்.

ஆண்டு தோறும் இரண்டு தொகுதி ரயில்வே வாரண்ட் அரசு ஓய்வூதியர்களுக்கு இனி வழங்கப்படும்,

இப்போது ஒரு செட் ரயில்வே வாரண்ட்தான் வழங்கப்படுகின்றது.

இது சம்பந்தமான சிபார்சுகள் அண்மையில் அமைச்சரவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

[உ–எ]

## அச்சுவேலியில் அடையாளம் காணப்பட்ட சில சடலங்கள்

அச்சுவேலி, ஜூன் 12
அச்சுவேலி இராணுவ முற்றுகையால் கொல்லப்பட்டவர்களின் சிலரின் சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டன.

தம்பிராசா பத்மராசா [வயது 32]– அச்சுநகர் தேவாலய ஒழுங்கை, சின்னக்குட்டி சின்னத்தம்பி [வயது 60]– பாரதி வீதி, தவசி கந்தசாமி [வயது 30]– பத்தமேனி, எஸ். இரத்தினவடிவேல் [வயது 35]– அச்சுவேலி, எஸ். பாலையா [வயது 50]–அச்சுவேலி கொலனி எஸ். வைத்தி [வயது60] அச்சுவேலி, திருமதி. தவமணி சிவசுப்பிரமணியம் [வயது 45]– நாவற்காடு, வை. பொன்னையா [வயது 55]– நாவற்காடு.

இவர்களின் சடலங்கள் உறவினர்களினால் அடையாளம் காணப்பட்ட போதிலும், திருமதி. சிவசுப்பிரமணியம் தவமணியின் சடலம் தவிர மற்றைய சடலங்கள் அந்தந்த இடங்களிலேயே எரிக்கப்பட்டன.

இதுதவிர இனங்காணாத நிலையில் அச்சுவேலிமகாவித்தியாலயத்தின் பின்னால் உள்ள ஒரு வீட்டில் 6 சடலங்களும், இராசவீதியில் ஒன்றும், அச்சுவேலி கொல்லை ஒழுங்கையில் ஒன்றும், உருக்குலைந்த நிலையில் அந்தந்த இடங்களிலேயே தகனம் செய்யப்பட்டன. [உ–11]

## வீரவணக்கம்

யாழ்ப்பாணம், ஜூன்12
திருகோணமலையில் புதன்கிழமை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்ற நேரடி மோதலில் புலிகள் இயக்கப் போராளி கப்டன் ரமேஸ் (செல்வரட்ணம்–திரியாய்) வீரமரணமடைந்தார். (உ–10)

# உள்ளூர் அகதிகளுக்கு ஒரு வார கால உணவு

## நிவாரணமாக வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 12
கடந்த 25 ஆம் திகதிக்குப்பின் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு வார நிவாரண இலவச உணவு வழங்க அரச அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நிவாரண உதவியை பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை பாதிக்கப்பட்டவர்கள் தத்தமது பகுதி கிராம சேவகர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இடம் பெயர்ந்தவர்கள் தாங்கள் தற்போது தங்கியுள்ள பகுதி கிராம சேவகரிடம் படிவங்களைப் பெறலாம்.

படிவங்களை நிரப்பி அவற்றைப் பெற்ற கிராம சேவகர் பிரிவிற்குரிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் அவற்றை நிரப்பி ஒப்படைக்க வேண்டும்.

உதவி அரச அதிபரின் சிபாரிசின் பேரில் தத்தமது பகுதி ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் இலவச உணவுப் பொருள்களைப் பாதிக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு யாழ் செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

(உ–எ)

## இருதய நோயை தடுக்க யோகாசனம்!

மாஸ்கோ, ஜூன் 11
இருதயநோய் வராமல் தடுப்பதற்கும் அதனைக் குணப்படுத்துவதற்கும் யோகாசனத்தை பயன்படுத்துவது பற்றிய ஆராய்ச்சிகளை இந்தியாவும் சோவியத் யூனியனும் கூட்டாக மேற்கொள்ளவுள்ளன.

''டாஸ்'' செய்தி ஸ்தாபனம் இதை அறிவித்தது.

மூன்று ஆண்டுகால ஆராய்ச்சிகளை மாஸ்கோ இருதய நோய்ச் சிகிச்சை நிறுவகமும், புதுடில்லியில் உள்ள இந்திய வைத்திய நிறுவகமும் கூட்டாக மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இப்படி 'டாஸ்' மேலும் அறிவித்தது. [அ–எ]

## பிரசைகள் குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
வடக்கு கிழக்கு பிரசைகள் இணைப்புக் குழுவின் விசேட கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ–எ)

## யாழ்ப்பாணத்தை பிடிக்க படையினர் நினைக்கவில்லை

### கூட்டுப்படைத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 12
யாழ்நகரை இராணுவ ரீதியாக நாம் கைப்பற்ற முடியும். ஆனால் நாம் அப்படிச் செய்யப் போவது இல்லை. எந்தக் கட்டத்திலும் யாழ் நகரைக் கைப்பற்ற நாம் எண்ணியதும் இல்லை.

கூட்டுப்படைகள் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க முன்கண்டவாறு தெரிவித்தார்.

''யாழ்ப்பாண நகரை உங்களால் கைப்பற்ற முடியுமா? அதற்கான திட்டங்கள் உங்களிடம் உண்டா? நிர்ப்பந்தம் காரணமாகத்தான் இராணுவ நடவடிக்கையை இடைநிறுத்தியதாகக் கூறப்படுவது உண்மையா?''

இப்படி வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் ஜெனரல் ரணதுங்காவைக் கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே ஜெனரல் ரணதுங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

''தாக்குதலை இடைநிறுத்த எம்மீது நிர்ப்பந்தம் செலுத்தப்படவில்லை. ஜனாதிபதியுடன் தான் நான் நடவடிக்கைகள் பற்றி ஆலோசிப்பது உண்டு. மற்றவர் சொல்வது, சொல்லாதது பற்றி எனக்குக் கவலையில்லை.

யாழ்ப்பாணம் நகரில் உள்ள சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் மக்களின் பாதுகாப்புப் பற்றித்தான் பாதுகாப்புப்படையினர் எப்போதும் கவலைப்பட்டு வருகின்றனர்.

இப்படிக் கூட்டுப் படைத்தளபதி தெரிவித்தார். (உ–எ)

## தூதருக்கு சவால்!

கொழும்பு, ஜூன் 12
இந்தியத் தூதரின் வாசஸ்தலத்துக்கு முன்னால் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகத்துக்கும், யு. என். பிக்கும் எதுவித தொடர்பும் இல்லை. தொடர்பு இருப்பதாக தாம் கூறியதை இந்தியத் தூதர் நிரூபிப்பாரா?

— இப்படி வண. [illegible] பொட ஞானிசர தேரர் இந்தியத் தூதருக்குச் சவால் விடுத்திருக்கிறார்.

(உ–எ)

## மாவிட்டபுரம்....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லாமல் திரும்பினர்.

இதற்கிடையில் தையிட்டிக் கிராம மக்கள் சிலர் ஒழுங்கைப் பாதைகளால் நேற்றுக் காலை வீடுகளைப் பார்வையிடச் சென்றபோது வீமன்காமம் கொலனி என்னுமிடத்தில் இராணுவத்திடம் அகப்பட்டுக்கொண்டனர்.

இவ்வாறு அகப்பட்ட மூவர் இராணுவத்தால் விசாரணை செய்யப்பட்டபின் விடுவிக்கப்பட்டனர்.

மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி பகுதிகளில் வெற்றிலைத் தோட்டங்களை விவசாயிகள் சென்று பார்வையிடாதிருப்பதால் அவை கருகி அழியும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (உ–68)

# இந்தியா தவறானவழியில்; இறுதி வெற்றி எமக்கே கிடைக்கும்

### ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 12
இந்தியா அஹிம்சை வழியை மறந்து தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. நாம் சரியான பாதையில் செல்கின்றோம். அதனால் இறுதி வெற்றி எமக்கே கிடைக்கும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பௌத்த மத நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது:–

வன்செயல்களினால் எவரையும் தோற்கடிக்க முடியாது. ஸ்ரீலங்கா இன்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி இருக்கின்றது.

இந்தியா பெரிய நாடு. அதனுடன் நாம் யுத்தம் புரியமாட்டோம். எதிர் காலத்திலும் இந்தியாவுக்கு எதிராக நாம் ஆயுதம் ஏந்தப்போவது இல்லை.

சரியான பாதையில் செல்லும் எம்மை வன்செயல்களினால் தடுத்து



நிறுத்த முடியாது.

— இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரதமர் பிரேமதாஸாவும் அங்கு பேசினார்.

(உ–எ)

# குண்டு வீசுவதை விட உணவுப் பொதி போடுவது நல்லது

### அமெ. செனட்டர் சோலார்ஸ் கருத்து

வாஷிங்டன், ஜூன் 11
குண்டுகளைப் போடுவதை விட உணவுப் பொதிகளைப் போடுவது நல்ல செயலே.

ஓர் அசாதாரண நிலையில், தலையிடாக் கொள்கையை விட மனித சமுதாயத்தைக் காப்பாற்றும் மனிதாபிமான செயல்களில் ஈடுபடுவது சிறப்பானதாகும்.

இப்படி பிரபல அமெரிக்க செனட்டர் ஸ்டீபன் சோலார்ஸ் தெரிவித்தார்.

1971இலும் படுகொலையில் இருந்து கிழக்கு வங்காளிகளை காப்பாற்றிய இந்தியாவின் மனிதாபிமான சேவையை நாம் நினைவுகூரவேண்டும் என்றும் செனட்டர் சோலார்ஸ் தெரிவித்தார்.

ஒரு நாடு அயல் நாடு ஒன்றுக்குள் அத்துமீறிப் புகுந்து விமானத்தில் இருந்து உணவுப் பொதிகளைப் போட்டது சரியான செயலா? இப்படி ஒரு செய்தியாளர்கேட்டதற்கே செனட்டர் சோலார்ஸ் முன்கண்டவாறு பதிலளித்தார்.

திரு. சோலார்ஸ் அமெரிக்க செனட்டின் வெளியுறவுக் கொள்கைக் குழுவின் ஆசிய, பசுபிக் பிராந்திய பிரிவின் தலைவராக இருக்கின்றார்.

(உ–எ)

## மத்திய பாதுகாப்பு அரசிடம் 25 ஆயிரம் கோரும் மீனவர்கள்

இலங்கைக் கடற்படையிடம் இருந்து பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி இந்திய மத்திய அரசிடம் தமிழக இயந்திர மீன் பிடி கூட்டுறவுச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுமார் 25ஆயிரம் மீனவர்கள் வரை இராமேஸ்வரம், கச்சதீவு கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பிரஸ்தாப மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தற்போது துன்புறுத்தலுக்குள்ளாகி வருகின்றனர். இதைத் தடுத்து நிறுத்தி போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும். இப்படி சங்கத்தின் மகஜரில் கூறப்பட்டுள்ளது. (உ–எ)

## இந்தியாவை கண்டித்து கிறிஸ்தவர் ஊர்வலம்

கொழும்பு, ஜூன் 12
இலங்கையின் உரிமைகளில் இந்தியா தலையிடுவதை கண்டித்து நேற்று கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப் பட்டது.

ரோமன் கத்தோலிக்கர்களால் நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் பெரும் எண்ணிக்கையான மதகுருமார், கன்னியாஸ்திரிகள் கலந்து கொண்டனர்.

மருதானையில் ஆரம்பமான ஊர்வலம் கோட்டையிலுள்ள இந்திய தூதரகத்தின் முன் முடிவுற்றது.

இந்திய தூதுவர் டிக்ஸிற்றிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

ஊர்வலத்தின் முடிவில், மருதானையில் ஒரு பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

(உ–எ)

## தலாய்லாமா கவலை தெரிவிப்பு

இலங்கை நிலைமை குறித்து பௌத்த தலைவர் தலாய்லாமா கவலை வெளியிட்டிருக்கிறார்.

இரண்டு தரப்புக்களும் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

## வழித் தேங்காயை தெருப் பிள்ளையாருக்கு அடிக்கும் இராணுவம்!

அச்சுவேலி, ஜூன் 12
வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைக்கும் செயல்களை அச்சுவேலியில் முகாமிட்ட இராணுவத்தினரும் செய்தனர்!

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள், தனியார் கடைகள் என்பவற்றை உடைத்து அங்கிருந்த பொருள்களை மக்களுக்கு விநியோகித்தனர் இராணுவத்தினர். அதுமட்டுமா அந்த விநியோகக் காட்சிகளை ரூபவாஹினிக்காகப் படமும் எடுத்தனர். என்னே தமிழ் மக்களுக்கு உதவும் தாராளம்!

வலி கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒன்பது கிளை நிலையங்கள் உடைக்கப்பட்டு இராணுவத்தினரால் பொருள்கள் எடுக்கப்பட்டன.

அந்தக் கிளைகளின் விவரம் வருமாறு:–

ப.நோ.கூ. சங்கத்தின் பொருள்களஞ்சியம், அச்சுநகர் கிளை, அச்சுவேலிசந்திக் கிளை, இரும்புக்கடை, புடைவை விற்பனை நிலையம், அச்சுவேலி தெற்குக் கிளை, அச்சுவேலி மொத்த விற்பனை நிலையம், பத்தமேனிக் கிளை. (அ–11)

## நிவாரண உதவி; இலங்கையின் முடிவு சில தினங்களில்

யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழருக்கு நிவாரண உதவிகளை வழங்குவது சம்பந்தமாக இந்திய அரசு சமர்ப்பித்த வழிமுறைகளை ஆராய்ந்து சில தினங்களில் முடிவுகளை தெரிவிப்பதாக இலங்கை அரசு அறிவித்து உள்ளது.

நேற்று கொழும்பில் வெளியுறவு அமைச்சர் சாஹுல் ஹமீத்தை இந்தியத் தூதர் டிக்ஸிற் சந்தித்தார்.

அப்போது உணவுப் பொருள்களை யாழ்குடா மக்களுக்கு விரைந்து வழங்குவதற்குத் தேவையான இந்திய அரசின் வழிமுறைகளை இந்தியத் தூதர் அமைச்சரிடம் கையளித்தார்.

இந்த வழிமுறைகளை விரைவாகப் பரிசிலனை செய்து சில தினங்களில் முடிவைத்தெரிவிப்பதாக அமைச்சர் ஹமீது இந்தியத் தூதரிடம் தெரிவித்தார். (உ–எ)

# இலங்கை - இந்திய உறவு தூள் தூளாகி விட்டதே!

கொழும்பு, ஜூன் 12
நீண்டகால இலங்கை–இந்திய உறவுகள் தூள் தூளாகி விட்டன.

இலங்கை அரசுக்கும் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் இடையே மத்தியஸ்தராகக் கடமையாற்றி வந்த இந்தியா மீதான நம்பகத்தன்மை பாதிக்கப்பட்டு விட்டது.

—இப்படி வெளியுறவு அமைச்சர் சாஹுல் ஹமீது தெரிவித்தார்.

ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் அமைச்சர் ஹமீது மேலும் சொன்னதாவது:–

கடந்த 4 ஆம் திகதி இந்தியா, விமான மூலம் உணவுப் பொதிகளை யாழ் குடாவில் போடும் என்று நான் கனவிலும்

### ஹமீத் கவலை

நினைக்கவில்லை. இச்செயல் கற்பனை செய்து பார்க்கமுடியாத ஒன்று.

சிறிய நாடு ஒன்றுடன் பெரிய நாடு நடந்து கொள்ளும் விதம் இது வல்ல.

### ஒருபக்கச் சார்பு

மத்தியஸ்தரிலும் பார்க்க இந்தியா ஒரு பக்கச் சார்பாக நடந்து வருகிறது என்ற எண்ணம் சிலரிடம் முன்னர் இருந்து வந்தது. நம்மில் சிலர் அதை ஆதரிக்கவில்லை.

இப்போது அந்த எண்ணம் சூடு பிடிக்கத் தொடங்கி உள்ளது.

எப்படியாயினும் 4 ஆண்டு கால இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் உதவியின்றி அரசியல் தீர்வு காண முடியாது.

### தீவிரவாதிகளும் இந்தியாவும்

தீவிரவாதிகளைப் பேச்சு வார்த்தைகளுக்கு இந்தியாவினால் மட்டுமே அழைத்து வர முடியும்.

இதுவரை மத்தியஸ்தராக இந்தியா இருந்து வந்தது. இப்போது நிலைமை மோசமாக மாறி விட்டது.

இந்தியாவை இனி மத்தியஸ்தராக ஏற்க முடியாது என்று நான் சொல்ல மாட்டேன்.

அடுத்த நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளில் தான் தங்கியுள்ளது. ஜனநாயக வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காண அவர்கள் விரும்புவார்களா? அல்லது துப்பாக்கியைத் தொடர்ந்து பாவிக்கவே விரும்புவார்களா?

— இப்படி அமைச்சர் ஹமீது பேட்டியின் போது கேட்டார்.

(உ–எ)

விற்பனைக்கு
Bairaha Farms
பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும்.
சற்குணராஜா பிறதர்ஸ்
பிரம்படி, கொக்குவில்.
(1416)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 12-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Friday June 12, 1987 Registered as a Newspaper at the General Post office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org